COMMISSIONER OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
17 FEB 2023
CHENNAI - 600 015.

**சுருக்கம்**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பனேந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. இரா.மனோன்மணி தனது சொந்த வேலைகளின் பொருட்டு, 20.02.2023 முதல் 21.03.2023 வரை வெளிநாடு (நியூசிலாந்து) சென்று வருவதற்கு அரசின் அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.4(2)) துறை

**அரசாணை (வாலாயம்) எண்.85**

**நாள் 16.02.2023**
**சுபகிருது, மாசி 04**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டவை.**

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை அவர்களின் கடித ந.க.எண். 78884/2022/பரா.1.4, நாள்: 30.01.2023.

******

**ஆணை:-**

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பனேந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. இரா.மனோன்மணி என்பவர் 20.02.2023 முதல் 21.03.2023 வரை வெளிநாடு (நியூசிலாந்து) சென்று வர தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 82-A-ன்படி அரசின் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 82A-ன்படி சிற்றூராட்சியின் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றியக் குழு அல்லது மாவட்ட ஊராட்சியொன்றின் தலைமையர், துணைத் தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை வகித்து வருகின்ற நபர் எவரும் அரசின் எழுத்து வடிவிலான அனுமதியுடனல்லாமல், அவ்வாறான தமது அலுவலகத் தகுதியில் அயல்நாடு எதற்கும் பயணம் எதனையும் மேற்கொள்ளுதல் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எனவே, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையிலும், பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 82-A-ன்படியும் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பனேந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.இரா.மனோன்மணி என்பவர் 20.02.2023 முதல் 21.03.2023 வரை தனது சொந்த செலவில் வெளிநாடு (நியூசிலாந்து) சென்று வர முன் அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
திரு. இரா.மனோன்மணி,
செல்லப்பனேந்தல் ஊராட்சி மன்றத் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
(**வழி:** ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்).
ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரகம், சென்னை-15
இருப்பு கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**